**OS.NO: 19/2024**

**DW 1 :** ஷேசசயனம் த/பெ.ராகவலு

**நாள்** : 11.02.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதி மகேஷ் எனக்கெதிராக என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியும். நான் B.com படித்துள்ளேன். நான் தற்சமயம் சென்னை முகப்பேரில் குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு நான் அரக்கோணம் டவுனில் கணேஷ் நகரில் குடியிருந்து வந்தேன் என்று சொன்னால் சரிதான்.

என் மகளிள் மருத்துவ படிப்புக்காக வேண்டி தான் நான் சென்னைக்கு குடிபெயர்ந்து சென்றேன் என்று சொன்னால் சரிதான். எனது மகள் மருத்துவ படிப்பை படித்து வருகிறார் இன்னும் முடிக்கவில்லை.

வாதி மகேஷ் எனக்கு சுமார் 25 வருடமாக நல்ல பழக்கம். வாதி வசதியானவர் என்று சொன்னால் சரிதான். அவர் பலவிதமான தொழில்களை செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். வாதிக்கு சொந்தமாக பெட்ரோல் பங்க், ரியல் எஸ்டேட், டைல்ஸ் கடை மற்றும் ஹர்டுவேர்ஸ் கடை ஆகியவற்றை வைத்து நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

அசல் வழக்கு எண்.19/2024 –ல் கண்டுள்ள வழக்கு சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் எனக்கு பாத்தியமானவை என்று சொன்னால் சரிதான். அவைகள் மூதூர் கிராமத்தில் உள்ளன என்றால் சரிதான் அவைகள் புஞ்சை நிலங்கள் மற்றும் பம்பு செட் என்று சொன்னால் சரிதான்.

தாவா சொத்துக்களுக்குண்டான அசல் ஆவணங்களை நான் வாதி வசம் ஒப்படைத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். பொதுவாக எந்த ஒரு ஆவணமாக இருந்தாலும் அதில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று தெரிந்து கொண்டு தான் நான் கையொப்பம் இடுவது வழக்கம் என்று சொன்னால் சரிதான்.

நான் ஒரு பொய்யான ஆவணம் மற்றும் போலியான ஆவணம் என்றால் நான் அதில் கையொப்பம் இடமாட்டேன் என்று சொன்னால் சரிதான். நான் இன்றைய தேதி வரையில் எந்த ஒரு பொய்யான மற்றும் போலியான ஆவணத்திலும் கையொப்பம் இட்டு யாரிடமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

என்னுடைய மகளின் மருத்துவ படிப்பை சவிதா மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் M.B.B.S 2020-ம் ஆண்டு சேர்ந்தார். அவரின் ஆண்டு கல்வி கட்டணம் ரூ.25,25,000/- ஆகும். அவர் முதலாம் ஆண்டு மட்டும் தான் படித்தார் அதன் பின்பு அவரது மருத்துவ படிப்பை தொடரவில்லை.

நான் தாவா சொத்துக்களை விற்பனை செய்வதாக ஒப்பந்தம் போடப்பட்டு எழுதிகொடுப்பவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எழுதி வாங்குபவர் என்ற இடத்தில் மகேஷ் என்று குறிப்பிட்டுள்ளது, வாதி தான் என்று சொன்னால் சரிதான்.

02.09.2021 அன்று தான் வாதசாஆ.1 ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாதசாஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துகள் எனக்கு எந்த வகையில் பாத்தியமானது என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

வாதசாஆ.1 ஆவணத்தில் பக்கம் 2-ல் என் குடும்ப செலவிற்காவும், எனது மகளின் மேற்படிப்பு செலவிற்காகவும் செண்ட் ரூ.20,000/- என்று விலைபேசி 3 ஏக்கர் 75 செண்ட் நிலத்திற்கு ரூ.75 லட்சம் என கிரைய தொகை என்று முடிவு செய்து அதற்கு முன் பணமாக என்னிடம் நான்கு தவணைகளாக ரூ.60 இலட்சம் போக மீதத்தொகை இன்றைய தினத்தில் இருந்து 11 மாதத்திற்குள் அதவாது 02.09.2021 - 01.08.2022 க்குள் மேற்படி தொகையை செலுத்திய பிறகு தங்களுக்கோ தங்களது உரிமம் பெற்ற நபருக்கோ என் சார்பில் பத்திரம் எழுதிக்கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் அது தயாரிக்கப்பட்டது.

வாதசாஆ.1 -ல் கண்ட சங்கதிகள் அனைத்தும் உண்மை தான் அதில் உள்ள கையொப்பமும் என்னுடைது தான் ஆனால் அது தயாரிக்கப்பட்ட ஆவணம்.

வாதசாஆ.1 ஆவணத்தில் 02.09.2021 அன்று தான் நான் கையொப்பம் இட்டேன். வாதசாஆ.1 ஆவணம் 4 பக்கங்கள் அடங்கியது அந்த நான்கு பக்கங்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். அந்த கையொப்பங்கள் தவிர பச்சை தாளிலும் என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது.

நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வாதசாஆ.1 ல் உள்ள விவரத்தை படிக்காமல் கையொப்பம் செய்துள்ளேன் என்று தான் கூறியுள்ளேன் என்றும், மற்றபடி அதில் உள்ள விவரங்கள் நான் மறுப்பு தெரிவித்து கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

நான் 02.09.2021 அன்று கையொப்பம் போட்ட பிறகு வாதசாஆ.1 ஆவணத்தில் என்ன விவரம் கண்டுள்ளது என்று எனக்கு தெரிவிக்க வேண்டி வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. நம்பிக்கையில் அடிப்படையில் கையொப்பம் இட்டேன். அதன் பிறகு தான் ஆவணம் தயார் செய்யப்பட்டது பற்றி எனக்கு தெரியவந்தது.

வாதசாஆ.1 –ல் வாதி என்னை வற்புறுத்தியோ அல்லது நிர்பந்தப்படுத்தியோ என்னிடம் கையொப்பம் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

வாதசாஆ.1 ஆவணத்தில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்பதை நான் படிக்காமல் கையொப்பம் இடமாட்டேன் என்று நான் கையொப்பம் இடுவதற்கு முன்பு மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் இல்லை.

வாதசாஆ.1 ஆவணம் R.மகேஷ் என்பவரது வீட்டில் தான் தட்டச்சு செய்யப்பட்டு கையொப்பம் இடப்பட்டது என்று சொன்னால் அந்த ஆவணத்தை தயார் செய்தது வாதி தான் கையொப்பம் மட்டும் நான் போட்டேன். வாதசாஆ.1 ல் நான் ஜோதி நகரில் உள்ள பெட்ரோல் பங்கில் வைத்து தான் கையொப்பம் இட்டேன்.

நான் தாக்கல் செய்துள்ள பிராமண வாக்குமூலத்திலோ அல்லது பதிலுரையிலோ வாதசாஆ.1 ஆவணம் வாதியால் தயார் செய்யப்பட்டது என்று கூறியுள்ளேனா என்றால் ஆமாம். கூறியுள்ளேன்.

ஒரு சொத்து குறித்து ஒப்பந்தம் போட வேண்டி இருந்தால் அந்த சொத்து சம்பந்தமான சர்வே எண் மற்றும் அதன் அளவுகள் அகியவற்றின் விவரங்களை நான் கொடுத்தால் மட்டுமே ஒப்பந்தம் போட முடியும் என்று சொன்னால் சரிதான்.

வாதசாஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்களை நான் யார் யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் மற்றும் அதன் விஸ்திரனம் என்னவென்று நான் கூறியதன் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் நான் எதுவும் கூறவில்லை என்னுடைய ஆவணங்களை பார்த்து வாதியாகவே தயார் செய்துக்கொண்டார்.

நான் என்னுடைய அசல் ஆவணங்களை வாதியிடம் கிரைய ஒப்பந்தம் போடுவதற்காக தான் நான் ஒப்படைத்தேன் என்று சொன்னால் சரியல்ல என்னுடைய வீடு சுந்தரம் பைனான்ஸில் அடமானம் போட்டிருந்ததேன்

அதனை மீட்டெடுக்க ஏதாவது பத்திரம் கொடுக்குமாறு கூறியதன் அடிப்படையில் நான் அவைகளை ஒப்படைத்தேன். சுந்தரம் பைனான்ஸிற்கும் ரூ.19,09,151/- பாக்கி செலுத்த வேண்டியிருந்தது அதை வாதி தான் எனக்காக சுந்தரம் பைனான்ஸிற்கு செலுத்தினார்.

நான் சுந்தரம் பைனான்ஸில் பெற்ற கடனை பைசல் செய்வதற்காக தான் என்னுடைய அசல் ஆவணங்களை வாதியிடம் ஒப்பபடைத்தேன் என்றும், அந்த பணத்தை நான் திரும்ப செலுத்திவிட்டு என்னுடைய ஆவணங்களை திரும்ப பெற்றுக்கொள்வதாக ஆவணம் ஏதாவது வாதியிடம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை.

என்னுடைய பதிலுரையில் என்னுடைய அசல் ஆவணங்களை சுந்தரம் பைனான்ஸில் பெற்ற கடனுக்காக தான் ஒப்படைத்தாக கூறவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் உள்ள குமார் என்பவர் ஒரு ஏ.சி மெக்கானிக் என்று சொன்னால் சரிதான். அவர் என்னுடைய வீட்டிற்கு வந்து ஏ.சி பழுது மற்றும் எலட்ரிக்கல் வேலைகளை செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

குமாருக்கும் எனக்கும் எந்த விதமான முன்விரோதமும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கும் அவருக்கும் எந்த தொடர்பும் இல்லை. வாசா.2 எனக்கும் நண்பர் என்றும் அவர் என்னுடைய வீட்டில் மின்சாதனப் பொருட்களை பழுது பார்த்துள்ளார் என்றும், வழக்கிற்காக எனக்கு அவரை தெரியாது என்று கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாசா.2 வாதியினுடைய நண்பர் அதனால் இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்து கொண்டதாக சாட்சி கூறினார்.

வாதசாஆ.1 ஆவணம் 02.09.2021 அன்று ஏற்பட்ட ஆவணம். ஆவணத்தில் உள்ள சங்கதிகள் நான் கூறி தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தில் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது.

வாதசாஆ.1 ல் உள்ள விவரங்களை நான் தட்டச்சு செய்த பிறகு தான் 4 பக்கங்களிலும் கையொப்பம் இட்டேன். வாதசாஆ.1 ல் உள்ள தட்டச்சு செய்யப்பட்ட முதல் தாளில் மட்டும் அந்த விவரங்களின் மேல் ஏதோ ஒரு தாளை வைத்து மறைத்து என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது.

மேற்படி விவரத்தை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ

அல்லது பதிலுரையிலோ கூறியுள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

வாதசாஆ.1 ஆவணத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு கையொப்பம் இட்டதாக நான் கூறுகின்ற விவரம் வழக்கிற்காக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதசாஆ.1 ல் உள்ள அனைத்து சங்கதிகளையும் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் நான் கையொப்பம் இட்டேன் என்றும் அதன் பின்பு தான் வாதி கையொப்பம் இட்டார் என்று சொன்னால் சரியல்ல. எந்த விவரத்தையும் நான் படித்து பார்க்கவில்லை.

நான் வாதசாஆ.1 ஆவணத்தில் கையொப்பம் இடுவதற்கு முன்பு அதில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு படித்து காண்பிக்குமாறு வாதியிடம் கேட்டேனா என்றால் இல்லை. படித்து பார்க்காமல் கையொப்பம் இடமாட்டேன் என்று நான் வாதியிடம் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

வாதசாஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றும், அதில் நானும் வாதியும் கையொப்பம் இட்டதை சாட்சிகளான குமார் மற்றும் தாமோதரன் பார்த்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னையும் வாதியையும் தவிர அந்த அறையில் நான் கையொப்பம் இட்ட தினத்தன்று வேறு யாரும் அங்கில்லை.

வாதசாஆ.1 ஆவணத்தில் நானும் வாதியும் கையொப்பம் இடும் போது என்னையும் வாதியையும் தவிர வேறு யாரும் இல்லை என்ற விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும், பதிலுரையிலும் கூறவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

வாதசாஆ.1 ல் சாட்சிகள் கையொப்பம் இட்டதை நானும் வாதியும் பார்த்தோம் என்றும், அதோ போல் வாதியும் நானும் கைபொப்பம் இட்டதை சாட்சிகளான குமார் மற்றும் தாமோதரன் ஆகியோர் பார்த்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் இருவரை தவிர வேறு யாரும் இல்லை.

"எங்கள் இருவரை தவிர வேறு யாரும் இல்லை" என்ற விவரத்தை நான் அனுப்பிய பதிலறிவிப்பிலும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும், பதிலுரையிலும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

வாதசாஆ.1 ஆவணமானது உண்மையான ஆவணம் இது வாதியால் போலியாக தயார் செய்யப்பட்டது என்று வழக்கிற்காக நான் கூறுகிறேன் என்று

சொன்னால் சரியல்ல.

நான் சுந்தரம் பைனான்ஸிற்கு பைசல் செய்ய வேண்டிய பணமான ரூ.19,09,151/- ஐ மட்டும் தான் வாதி எனக்காக காசோலையாக மேற்படி நிறுவனத்திற்கு செலத்தினார் என்றும் மற்றபடி வாதசாஆ.1 ல் கண்ட தொகையை நான் முன்பணமாக பெறவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதசாஆ.1 ல் கண்ட சொத்துக்களை ரூ.75 லட்சத்திற்கு கிரையம் பேசி அதில் ரூ.60 இலட்சத்தை 4 தவணைகளாக முன்தொகையாக பெற்றுக்கொண்டு மீதம் ரூ.15 இலட்சத்தை 11 மாத காலத்திற்குள் வாதியிடம் இருந்து பெற்றுக்கொண்டு நான் கிரையம் ஆவணம் வாதி பெயருக்கு எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் தான் வாதசாஆ.1 ஆவணம் என்று சொன்னால் அது பொய்.

வாதசாஆ.1 ல் கண்டுள்ள பாக்கி கிரைய தொகையான ரூ.15 இலட்சத்தை என்னிடம் செலுத்தி கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க பலமுறை என்னை அழைத்தும் நான் முன்வரவில்லை என்று சொன்னால் அவ்வாறு வாதி என்னை அழைக்கவும் இல்லை நான் மறுக்கவும் இல்லை.

அவ்வாறு அழைத்தும் நான் வராததால் தான் வாதி வாதசாஆ.2 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பை எனக்கு 29.07.2022 அன்று அனுப்பியிருந்தார் என்று சொன்னால் அவ்வாறு என்னை அழைக்கவில்லை. அனால் அறிவிப்பு அனுப்பியது உண்மை. மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொண்டு நான் 17.10.2022 அன்று பொய்யான சங்கதிகளை கொண்ட பதிலறிவிப்பை அனுப்பியிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு சொத்துக்கள் ரூ.2 கோடி மதிப்புள்ளது என்றும், ஆனால் வாதி ரூ.75 இலட்சத்திற்கு விக்கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று நான் கூறியுள்ளேன் அவ்வாறு மேற்படி தாவா சொத்துக்கள் ரூ.2 கோடி மதிப்பு பெறும் என்பதை நிரூபிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

மேற்படி விக்கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்த அன்று நான்கு காசோலைகளை தலா ரூ.5 இலட்சம் வீதம் வாதியிடம் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். முதலில் காசோலைகளை கொடுத்தேன் அதனை வைத்து நான் என்ன செய்ய முடியும், அதனால் ஆவணம் ஏதாவது கொடுக்குமாறு கேட்டார். அதனால் நான் தாவா சொத்தின் ஆவணத்தை

கொடுத்திருந்தேன்.

விக்கிரைய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பே மேற்படி 4 காசோலைகள் வாதியிடம் கொடுத்து வைத்திருந்த விவரத்தை என்னுடைய பதில் அறிவிப்பிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ, பதிலுரையிலோ கூறவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

நான் கூறுவது போல் விக்கிரைய ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பாக ரூ.5 இலட்சத்திற்கு 4 காசோலைகள் எதையும் வாதி வசம் ஒப்படைக்கவில்லை என்றும், அவைகள் வாதியின் பொறுப்பில் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த 4 காசோலைகளின் எண்களை என்னுடைய பதிலுரையில் கூறியுள்ளேன்.

இந்த வழக்கிற்காக நான் 4 காசோலைகளை கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதசாஆ.1 ஆவணத்தை வாதிதான் தயார் செய்தார் என்றும் நான் அதில் உள்ள விவரங்களை படிக்காமல் கையொப்பம் இட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அது தான் உண்மை.

வாதியானவர் பிராதில் கோரியுள்ள 2 பரிகாரங்களை பற்றியும் எனக்கு தெரியும். அதில் கூறியுள்ளவாறு எந்த பணத்தையும் நான் வாதியிடமிருந்து பெறவில்லை.

வாதசாஆ.1 ல் கண்ட சரத்துகளின் படி அதனை நிறைவேற்றவேண்டும் என்றும், மாற்று பரிகாரமாக அதில் குறிப்பிட்டுள்ள முன்தொகையை திருப்பி தரவேண்டும் என்று கூறியுள்ளாரே தவிர என்னுடைய ரூ.2 கோடி மதிப்புள்ள சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லை என்று சொன்னால் அப்படி எதுவும் நடக்கவில்லை அனைத்தும் போலியாக தயார் செய்யப்பட்டவை.

அரக்கோணம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கடைகளில் நான் வெங்காயம் வியாபாரம் செய்து வந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் தற்போது அந்த கடைகளை மூடிவிட்டு சென்னைக்கு சென்று விட்டேன் என்று சொன்னால் கொரோனா பாதிப்பு வரை மேற்படி வியாபாரத்தை நடத்தி வந்தேன்.

நான் வியாபாரத்தை விட்டு சென்னைக்கு சென்ற பிறகு நான் தாவா சொத்துக்களை விற்பனை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தான் வாதியிடம் கிரைய தொகையை பேசி வாதசாஆ.1 ஆவணத்தை முழு சம்மதத்துடன் தான் ஏற்படுத்தப்பட்டது என்றும், வாதியிடம் பெற்ற பணத்தை

ஏமாற்ற வேண்டி தான் நான்  வாதசாஆ.1 ல் உள்ள விவரத்தை படித்து பார்க்காமல் கையொப்பம் இட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதி கோரியப்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.11 17:51:02 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.